மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்
கோயமுத்தூர்.

MCOP No.693/2022

ம.சா. 1

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் நாள் செவ்வாய்கிழமை இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின்படி) திருமதி.எஸ்.பத்மா,எம்.எல்., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களால் சாட்சிக்கு ஆணையிட்டு உறுதி அளிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

பெயர் : விஜயலட்சுமி தொழில் :
தந்தை/கணவர் பெயர் : வயது :
கிராமம் :
தாலூக்கா :
முதல் விசாரணை :

கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல். கூடுதல் பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயாரிக்கப்பட்டது. கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்துதான் எனது கையொப்பத்தை இட்டுள்ளேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

1) நாராயணசாமியின் மருத்துவ செலவு ரசீது ம.சா.ஆ 7 வரிசை 1.
2) மேற்படியாரின் உடற்கூறாய்வு சான்றிட்ட நகல் ம.சா.ஆ 8.
3) மேற்படியாரின் இறப்பு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.9.
4) மேற்படியாரின் வாரிசு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.10.
5) மேற்படியாரின் ஆதார் அட்டை புகைப்படநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது அது ம.சா.ஆ.11.
6) என்னுடைய டிஸ்ஜார்ஜ் சம்மரி ம.சா.ஆவணம் 12.
7) என்னுடைய காயச்சான்று சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 13.
8) என்னுடைய ஆதார் அட்டை புகைப்படநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது அது ம.சா.ஆ.14.
9) என்னுடைய மருத்துவபில்கள் ம.சா.ஆவணம் 15 வரிசை.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf

குறுக்கு விசாரணை 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

விபத்து 1 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து **TN** 37 **BE** 0318 வாகன ஓட்டுனரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணித்தோம் என்றால் சரிதான். நாங்கள் பயணித்த அந்த வாகனத்தை ஓட்டியவர் என் கணவர். என் கணவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்திருந்தால் நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வின் போது தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. என் மகன் பள்ளிக்கு சென்று படித்துள்ளார். அதற்குரிய சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நாங்கள் மூவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் அணிந்திருந்தார். விபத்து சமயத்தில் 3 நபர் பயணித்தால் வாகனத்தை என் கணவர் கட்டுப்படுத்த முடியாமல் சென்று மோதிவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அங்கு வாகன போக்குவரத்து அதிகம் என்றால் சரிதான். என் கணவர் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்துநடை பெறவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் வேலை ,வருமானம், வயது ஆகியவற்றை காண்பிக்ககூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த விபத்து தொடர்பான குற்ற வழக்கில் சாட்சியமளிக்கவில்லை. அந்த குற்ற வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை. விபத்து என் கணவரின் அஜாக்கிரதையால் நிகழ்ந்தது என்றால் சரியல்ல. அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, கொடுங்காயமோ ஏற்படவில்லை என்று, வழக்கிற்காக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வயது, வேலை, வருமானத்தை காண்பிக்ககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

ஏற்பட்ட ஊனம் தொடர்பாக நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in open court read over to the witness and admitted by the witness to be Correct.

/Sd/Tmt.S.Padma,
III Additional District Judge,
Coimbatore.

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்
கோயமுத்தூர்.

MCOP No.693/2022

ம.சா. 2

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ம் நாள் செவ்வாய்கிழமை இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின்படி) திருமதி.எஸ்.பத்மா,எம்.எல்., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களால் சாட்சிக்கு ஆணையிட்டு உறுதி அளிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

பெயர் : சுப்பிரமணி தொழில் :
தந்தை/கணவர் பெயர் : வயது :
கிராமம் :
தாலூக்கா :
முதல் விசாரணை :

பிரமாண வாக்குமூலம் தாக்கல். பிரமாண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்துதான் எனது கையொப்பத்தை இட்டுள்ளேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்.

1) என்னுடைய டிஸ்ஜார்ஜ் சம்மரி ம.சா.ஆவணம் 16.

2) என்னுடைய காயச்சான்று சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 17.

3) என்னுடைய ஆதார் அட்டை புகைப்படநகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது அது ம.சா.ஆ.18.

4) என்னுடைய மருத்துவபில்கள் ம.சா.ஆவணம் 19 வரிசை.

<u>குறுக்கு விசாரணை 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்</u>

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணித்தோம் என்றால் சரிதான். நாங்கள் பயணித்த அந்த வாகனத்தை ஓட்டியது நான் தான். எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் இருந்திருந்தால் நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வின் போது தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. என் மகன் பள்ளிக்கு சென்று படித்துள்ளார். அதற்குரிய சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் நாங்கள் மூவரும் தலைகவசம் அணியவில்லை என்றால்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf

சரியல்ல. நான் தலைகவசம் அணிந்திருந்தேன். விபத்து சமயத்தில் 3 நபர் பயணித்தால் வாகனத்தை என்னால் கட்டுப்படுத்த முடியாமல் சென்று மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அங்கு வாகன போக்குவரத்து அதிகம் என்றால் சரிதான். நான் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்துநடை பெறவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் வேலை ,வருமானம், வயது ஆகியவற்றை காண்பிக்ககூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த விபத்து தொடர்பான குற்ற வழக்கில் சாட்சியமளிக்கவில்லை. அந்த குற்ற வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என் அஜாக்கிரதையால் நிகழ்ந்தது என்றால் சரியல்ல. அதனால் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, கொடுங்காயமோ ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வயது, வேலை, வருமானத்தை காண்பிக்ககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட ஊனம் தொடர்பாக நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொல்லி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றும், நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரியல்ல. என் வாகனத்திற்கு பதிவு சான்று இல்லை என்றால் அது நிதிநிறுவனத்தில் உள்ளது. வாகனத்தை எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் ஓட்டி சென்றது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in open court read over to the witness and admitted by the witness to be Correct.

/Sd/Tmt.S.Padma,
III Additional District Judge,
Coimbatore.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com
www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCB010050872022/truecopy/order-2.pdf